# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப.(ஓ),**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 77 /பேரூ/2024**
**நாள் : 24.12.2024**

திரு. மு. தினேஷ்,
மணலூர் பேட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மணலூர் பேட்டை பேரூராட்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர் தாலுக்கா, மணலூர்பேட்டை அஞ்சல், சேணியர் வீதி, எண். 18 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. தினேஷ், என்பவரின் 21.12.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.12.2023 அன்று பெறப்பட்டு, 77/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்கா, மணலூர்பேட்டை அஞ்சல், சேணியர் வீதி, எண். 18 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மு. தினேஷ், என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

"கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் மணலூர்பேட்டை பேரூராட்சி நிர்வாகத்தினால் ஐம்பை சாலையில் உள்ள புல எண். 70/8ல் சமுதாயக்கூடம் அரைகுறையுடன் கட்டப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேல் கைவிடப்பட்டுள்ளது. இந்த சமுதாயக்கூடம் தற்போது பயன்பாடற்ற கட்டடமாக மாறி இடிந்து விழுந்து கொண்டுள்ளது.

மணலூர்பேட்டை பேரூராட்சி நிர்வாகத்தினால் இடிந்து விழும் நிலையில் உள்ள சமுதாயக் கூடத்தை மீண்டும் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடிந்து விழும் நிலையில் உள்ள சமுதாயக்கூடத்தை மீண்டும் புதுப்பிக்கும் பணியை மேற்கொள்ள கூடாது என மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சி உதவி இயக்குநருக்கும் என இருவருக்கும் புகார் அளித்துள்ளேன்.

அரசு கட்டடத்தை பாதி பணியில் நிறுத்திய ஒப்பந்ததாரர் மீது பேரூராட்சி நிர்வாகத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மக்களின் வரிப்பணம் 20 ஆண்டுகளுக்கு மேலாக வீணாகியுள்ளது.

ஒப்பந்ததாரர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 27.07.2023 அன்று அளித்த புகார் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத மணலூர் பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறேன்.

கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடலூர் அவர்களுக்கு 27.07.2023 அன்று அளித்த புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் மணலூர் பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.**

**3) மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.08.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-**

''கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேணியர் தெருவில் வசிக்கும் திரு. மு. தினேஷ் என்பவரால் அளிக்கப்பட்ட புகார் மனு தொடர்பாக ஏற்கனவே தகவல் அறியும் உரிமைச்சட்டம் மற்றும் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் வாயிலாக தகவல்கள் அளிக்க கேட்டுக்கொண்டதின் பேரில் பதிலறிக்கைகளை மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலகக் கடிதங்கள் ந.க.எண்.61/2024, நாள் 11.03.2024, ந.க.எண்.76/2024, நாள் 11.03.2024, ந.க.எண்.109/2024, நாள் 12.03.2024 மற்றும் ந.க.எண்.115/2024, நாள் 13.03.2024–ன்படி கீழ்க்காணும் விவரங்கள் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணலூர்பேட்டை பேரூராட்சியின் 2008–2009 ஆம் ஆண்டின் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் செலவில் ஜம்பை சாலையில் புதியதாக சமுதாயக்கூடம் கட்டுவதற்கு உரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதன்பேரில் திரு. கே.வி. முருகன் என்பவருக்கு பணி ஒப்படைப்பு செய்து மேற்காணும் ஒப்பந்ததாரரால் இப்பணியினை செய்து முடிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. மேலும், இப்பணி தொடர்பாக கடந்த 2008–2009 முதல் 2010–2011 முடிய நடைபெற்ற உள்ளாட்சி நிதி தணிக்கையில் மேற்காணும் பணிக்கான அளவுப் புத்தகம் மற்றும் உரிய கோப்புகளை தணிக்கைக்கு தாக்கல் செய்யப்படவில்லை என தெரிவித்தும், தொகை வழங்கப்பட்ட பட்டியலுடன் இணைக்கப்பட்டிருந்த பணி முடிவறிக்கையின்படி செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான தொகைகள் வழங்கப்பட்டுள்ளது எனவும், இருப்பினும் இக்கட்டடத்தில் அத்தியாவசிய பணிகளான தரைதளம் சிமெண்ட் பூச்சு வேலை, மேற்கூரை சிமெண்ட் பூச்சு வேலை வெள்ளையடித்தல் மற்றும் கதவு ஜன்னல்கள் வைத்தல் மற்றும் இதர பணிகள் செய்யப்படாமல் விடுபட்டுள்ளது என தெரிவித்து, விரைவில் இப்பணிகளை செய்துமுடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இக்கட்டடத்தை கொண்டுவர தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் அப்போதைய பணியில் இருந்த செயல் அலுவலர்கள் பணி ஒய்வு மற்றும் இறப்பு காரணமாக உடன் இக்கட்டடத்தில் விடுபட்ட பணிகளை செய்து முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது என்ற தகவல் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளது என பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மணலூர்பேட்டை பேரூராட்சியின் நிதிநிலைமை சீராக இல்லாத காரணத்தினால் உடன் பேரூராட்சியின் பொதுநிதியிலிருந்து இக்கட்டடத்தின் விடுபட்ட பணிகளை செய்து முடிக்க இயலாமல் இருந்தது எனவும் நாளடைவில் மேற்காணும் கட்டடம் சிதிலமடையும் நிலை ஏற்பட்டதால் தற்போது இக்கட்டடத்தினை புதுப்பிக்கும் பணியினை மேற்கொள்ளவேண்டி அரசு நிதிபெற்று புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும் இப்பணிகள் முடிக்கப்பட்டவுடன் இக்கட்டடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் எனவும் மனுதாரருக்கு கடிதங்களின் வாயிலாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது என பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, இப்பணியானது பொதுமக்களின் நலன்கருதியும் பேரூராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்கத்துடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் இதில் முறைகேடுகள் மற்றும் நிதியிழப்புகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் இதன்மூலம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் மணலூர் பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரும் 22.10.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.09.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. மு. தினேஷ், என்பவர் 21.10.2023 நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் 22.10.2024 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, 22.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு. மு. தினேஷ் ஆஜராகவில்லை.

6)எதிர்மனுதாரரான மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.ச. மகேஸ்வரிஎன்பவர் 22.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"2008-2009 ஆம் ஆண்டின் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.15.00 இலட்சம் செலவில் ஜம்பை சாலையில் புதியதாக சமுதாயக்கூடம் கட்டுவதற்கு உரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, திரு. கே.வி. முருகன் என்பவருக்கு பணி ஒப்படைப்பு செய்து கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதில், இக்கட்டடத்தின் அத்தியாவசிய பணிகளான கட்டடப் பணியில் மொத்தம் ரூ. 3.14 இலட்சம் மதிப்பீட்டிற்குரிய தரைதளம் சிமெண்ட் பூச்சு வேலை, மேற்கூரை சிமெண்ட் பூச்சு வேலை, வெள்ளையடித்தல், கதவு ஜன்னல்கள் வைத்தல் போன்ற இதர பணிகள் விடுபட்டுள்ளன. எனவே, ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி சமுதாயக்கூடத்தினை முழுமையாக கட்டி முடிக்கப்படவில்லை.

விடுப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள பேரூராட்சியின் நிதி நிலைமை சீராக இல்லாத காரணத்தினால், மேற்படி கட்டடமானது நாளடைவில் சிதலமடையும் நிலை ஏற்பட்டது. எனவே, இக்கட்டடத்தினை புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்ள அரசுக்கு உரிய கருத்துரு சமர்ப்பித்து 2023-24ம் ஆண்டின் இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரம்பும் திட்டத்தின் கீழ் பழுதடைந்த சமுதாயக் கூடத்தினை புனரமைக்க ரூ. 39.00 இலட்சம் பேரூராட்சி இயக்குநரால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது

இப்புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு ஒப்பந்ததாரர் M/s.மரியம் கன்ஸ்ட்ரக்ஷன், திருக்கோவிலூர் எனும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. (இதற்கு ஆதாரமாக கட்டட புகைப்படங்களை சமர்ப்பிக்கிறேன்.)இப்பணிகள் முடிவுற்றபின் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவரப்படும்.ஏற்கனவே, கட்டப்பட்டு முடிவுறாத நிலையில் உள்ள கட்டடத்தினை கட்டுவதற்கான கட்டட உறுதிச்சான்றினை பொதுப்பணித் துறையின் பொறியாளரிடமிருந்து

பெற்று உரிய சான்றினை 10தினங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கிறேன் என உறுதியளிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**7) மனுதாரரின் புகார் மனு , மணலூர் பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. மு. தினேஷ் என்பவர் தனது 21.12.2023 நாளிட்ட மனுவில் கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.70/8, ஜம்பை சாலையிலுள்ள பேரூராட்சிக்கு சொந்தமான இடிந்து விழும் நிலையிள்ள பாழடைந்த சமுதாய கூடத்தை பேரூராட்சியால் புதுப்பிக்கும் பணி மேற்கொண்டுள்ளதை தடை செய்யக் கோரியும், இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாக புகார் தெரிவித்துள்ளார்.

2008–2009ஆம் ஆண்டில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் மணலூர்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட ஜம்பை சாலையில் புதிதாக சமுதாயக் கூடம் கட்டுவதற்கு உரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்தாரர் திரு. K.V.முருகன் என்பவருக்கு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டது என தெரிவித்து இருந்தாலும், 2008-2009ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையில் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான தொகைகள் வழங்கப்பட்டுள்ளது எனவும், இருப்பினும் இக்கட்டடத்தில் அத்தியாவசிய பணிகளான தரைதளம்/மேற்கூரை சிமெண்ட் பூச்சுவேலை, வெள்ளையடித்தல், கதவு ஜன்னல்கள் அமைத்தல் மற்றும் இதரப் பணிகள் என மொத்தம் ரூ.3,14,087 மதிப்பீட்டில் பணிகள் விடப்பட்டுள்ளன எனவும் இவற்றை உடனடி மேற்கொண்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும் எனவும் தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் விடுப்பட்ட பணிகள் மேற்கொள்ள பேரூராட்சியின் நிதி பற்றாக்குறை காரணமாக கட்டுமானப் பணிகள் நிலுவையில் இருந்த காரணத்தினால் கட்டடம் சிதிலமடையும் நிலை ஏற்பட்டது.

தற்போது 2023-24ஆம் ஆண்டு "இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் சமுதாயக் கூடத்தை பராமரிப்பு பணி செய்வதற்கு பேரூராட்சிகளின் இயக்குநரின் 13.10.2023 நாளிட்ட செயல்முறைகள் ஆணைகளில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, உரிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தாரர் M/s. மரியம் கன்ஸ்ட்ரக்ஷன், திருக்கோவிலூர் என்கிற நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணி நிறைவடையும் நிலையில் இருப்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் ஆவணத்தின் மூலம் அறிய வருகிறது. இந்நிலையில், 2008-2009ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூ.3,14,087 மதிப்புடைய விடுபட்ட பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து மீண்டும் ஆய்வு செய்து முடிவு செய்து கொள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

மேலும் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பேரூராட்சியின் மூலம் கட்டப்பட்ட சமுதாயகூட கட்டடத்தினை பொதுப்பணி துறையின் கள்ளக்குறிச்சி கோட்ட செயற்பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டதில், கட்டடத்தில் மேற்கூரை, கான்கிரீட் தரை, கான்கிரீட் வெளிப்புற மற்றும் உட்புற சுவர்கள் உறுதிதன்மையுடனும் பயன்பாட்டிற்கு தகுந்த நிலையில் உள்ளது என 05.12.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் கட்டட உறுதிதன்மை சான்றுபொதுப்பணித் துறை, கட்டட மற்றும் பராமரிப்பு செயற்பொறியாளரால் வழங்கப்பட்டுள்ளது என பேரூராட்சி செயல் அலுவலரின் 06.12.2024 நாளிட்ட அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது. எனவே, மணலூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கையை

இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 24ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. மு. தினேஷ்,
எண். 18, சேணியர் வீதி,
மணலூர்பேட்டை போஸ்ட், திருக்கோவிலூர் தாலுக்கா,
கள்ளக்குறிச்சி மாவட்டம் – 605 754

2. செயல் அலுவலர்,
மணலூர் பேட்டை பேரூராட்சி,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

3. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை – 600 035.

4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

5. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (மு.கூ.பொ.)